தெரணியகல பிரதேச சபை – 2022
-----------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தெரணியகல பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 உள்ளவாறான நிதி நிலமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரசச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் தெரணியகல பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையான நியாயமான நிலைமையை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின. கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.
- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.
- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கொல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,
- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்,
- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகளிற்காக குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரசட்டத்தின் 6(1)(ஈ) (iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரசட்டத்தின் 6(i)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் சமர்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களினுள் உள்ளடக்குகின்றன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 05 திரவ தெளி கருவிகள், ஓர் ஹெம்மர் இயந்திரம், ஓர் சங்கிலி வால் மற்றும் ரூபா 800,000 ஆன ஓர் பிரேலர் இயந்திரமும் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக் கொள்கிறேன். 2023 ஆண்டில் கண்கீடு செய்ய நடவடிக்கை எடுப்பதாக. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | நிர்மாணிக்க எதிர்பார்த்த போதும், டென்டர்தாரர்கள் முன்வராத 20 கடையறைகளிற்காக முற்செலுத்தற் பணம் (Key money) ரூபா 22,080,000 தொகை 2014 ஆண்டு முதல் பெற வேண்டியதாக முன்கொண்டு வரப்படுகின்றது. | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) | மாதாந்த வாடக்கைக்கு வழங்கியுள்ள 04 வாராந்த சந்தை கடையறைகளிற்காக பெற வேண்டிய ரூபா 1,728,000 தொகையான முற்செலுத்தல் மீதியொன்று முன்கொண்டு வரப்படுகின்றது. | - மேற்படி - | - மேற்படி - |

### 1.6.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்கு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிநிலைமை கூற்றின் பிரகாரம் மிளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியன்று 03 கணக்கு விடயங்களில் நிலவிய மீதிகள், அவற்றுடன் தொடர்பான | ஏற்றுக் கொள்கிறேன். நீண்ட காலமாக நிலவிரும் இம் மீதகளை, ஆவண பரிசோதனையின் | நிதிக்கூற்று மீதிகள், அதனுடன் தொடர்பான அட்டவணைகளுடன் |

| | | |
|---|---|---|
| அட்டவணைகளில் அத்திகதியில் நிலவிய மீதிகளுடன் ஒப்பிடுகையில் ரூபா 4,024,127 ஆன வித்தியாசம் நிலவியது. | பின்னர் செம்மையாக்க நடவடிக்கை எடுப்பதாக. | இணங்கக் கூடியதாக இருக்க வேண்டும். |

**1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இல்லாமை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அலுவலக மற்றும் நூலக உபகரணங்கள் ரூபா 7,261,856 தொகையினது சரி நிலையை உறுதி செய்ய தேவையான அட்டவணைகள் சமர்ப்பிக்கப்படவில்லை. | ஏற்றுக் கொள்கிறேன். 2023 கணக்குகளுடன் அட்டவணைகளை சமர்ப்பிப்பதாக. | உரிய அட்டவணைகள் சமரப்பிக்கபட வேண்டும். |

**1.6.4 அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 245,025 ஆன பண்டங்களின் பற்றக்குறையை பொறுப்புவாய்ந்த அலுவலர்களிடமிருந்து அறவிட வேண்டிய இயலுமையை கண்டறியாது மற்றும் சரியான அங்கீகாரமின்றி பதிவழிக்கப்பட்டிருந்தது.. | ஏற்றுக் கொள்கிறேன். | குறித்த பற்றாக்குறையை பொறுப்புவாய்ந்த அலுவலர்களிடம் இருந்து அறவிட வேண்டும். |
| (ஆ) | மக்கள் பிரதிநிதிகளிற்கு மீள் அறவிடும் அடிப்படையில் சபை நிதியத்திலிருந்து கடன் வழங்க அவ்வித சட்ட ஏற்பாடுகளும் இல்லாதிருக்கையில், 2022 ஆண்டினுள் 10 அங்கத்தவர்களுக்கு ரூபா 200,000 ஆன விழா முற்பணம் வழங்கி தவணைகளாக அறவிடப்பட்டிருந்தது. | ஏற்றுக் கொள்கிறேன். பொதுச் சபை அங்கீகாரம் கிடைத்தது. அத் தொகை 2022 ஆண்டில் அறவிடப்பட்டுள்ளது. எதிர்காலத்தில், தாபன விதிக்கோவை பிரகாரம் நடவடிக்கை எடுப்பதாக. | குறித்த சட்ட விதிகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.7 இணங்காமை**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்ப்பு | இணங்காமை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் | | | |
| i. நி.பி. 571 | காலம் கடந்த ரூபா 345,087 ஆன 19 வைப்புக்களை தீர்த்திருக்கவில்லை. | ஏற்றுக் கொள்கிறேன். | நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 5,805,812 தொகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை மிகைத்த வருமானம் ரூபா 5,590,670 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக முன்வைக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| **வருமான மூலம்** | **மதிப்பிடப்பட்ட வருமானம்** | **பில் போடப்பட்ட வருமானம்** | **சேர்க்கப்பட்ட வருமானம்** | **திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை** | **மதிப்பிடப்பட்ட வருமானம** | **பில் போடப்பட்ட வருமானம** | **சேர்க்கப்பட்ட வருமானம** | **திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை** |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீத வரி மற்றும் வரி | 8,223,845 | 9,169,126 | 8,665,439 | 2,421,200 | 8,217,845 | 8,531,487 | 8,212,571 | 2,281,894 |
| வாடகை | 7,246,849 | 8,152,080 | 8,281,477 | 63,684 | 7,688,150 | 5,224,907 | 4,543,865 | 783,296 |
| அனுமதிப்பத் திரக் கட்டணம் | 790,100 | 1,264,476 | 1,305,476 | 9,100 | 790,100 | 907,152 | 936,652 | 38,100 |
| ஏனைய வருமானம் | 2,553,500 | 5,007,633 | 4,856,840 | 711,166 | 2,585,500 | 3,578,661 | 3,587,847 | 631,824 |
| **கூட்டுத் தொகை** | **18,814,294** | **23,593,315** | **23,109,232** | **3,205,150** | **19,281,595** | **18,242,207** | **17,280,935** | **3,735,114** |

#### 2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

| **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரைகள** | **பரிந்துரை** |
|---|---|---|
| வீதவர மற்றும ஏக்கர் வரி ஆகிய வருமான விடயங்களில் 2022 திசெம்பர் 31 திகதிக்கு ரூபா 910,041 அறவிட வேண்டியதாக காணப்பட்டது. அப் பெறுமதியினுள் 01 ஆண்டிற்கும் 05 ஆண்டுகளிற்கும் இடையிலான காலம் பழைய ரூபா 255,489 ஆன மீதியும், 05 ஆண்டுகளை விஞ்சிய ரூபா 319,094 ஆன மீதியும் காணப்பட்டன. | ஏற்றுக் கொள்கிறேன். | நிலுவை வருமானத்தை தாமதமின்றி அறவிட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரைகள | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2015 ஆண்டை விடவும் பழைய ரூபா 357,869 ஆன கிடைக்க வேண்டிய அரச உதவி மீதியை தீர்த்திருக்கவில்லை. | ஏற்றுக் கொள்கிறேன். | பெற வேண்டிய மீதியை தாமதமின்றி அறவிட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு இறுதியில் ரூபா 52,596,720 ஆன வேலை கடன்கொடுனர் மீதியினுள் 01 ஆண்டிற்கும் 05 ஆண்டுகளிற்கும் இடையிலான ரூபா 27,966,021 ஆன மீதியும், 05 ஆண்டுகளை விஞ்சிய ரூபா 24,299,000 ஆன மீதியும் காணப்பட்டன | - மேற்படி - | கடன்கொடுனர் மீதியை தீர்க்க வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரைகள | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | உள்ளூராட்சி மறுசீரமைப்பு சுற்றறிக்கை வழிகாட்டிக் கோவையின் இலக்கம் 03/2010 சுற்றறிக்கையின் 1.3 பந்தி பிரகாரம் அனுமதியற்ற நிர்மாண கட்டுப்பாட்டிற்காக குழுவொன்றை இஸ்தாபித்திருக்கவில்லை. அவ்வாறே, நகர அபிவிருத்தி அதிகார சட்டத்தின் 21 பிரிவு பிரகாரம் அனுமதியற்ற நிர்மாணங்களிற்கு எதிராக தேவையான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. களப் பரிசோதனையொன்றை செய்து அனுமதியற்ற நிர்மாணங்கள் இனங்காண்பதனால் கிடைக்கும் முறைப்பாடுகளின் மீது கட்டளை விநியோகிக்கப்பட்டிருந்தது. அது தொடர்பாக பின்னூட்டலொன்றும் இடம் பெறவில்லை. | ஏற்றுக் கொள்கிறேன். கள பரிசோதனை மற்றும் பின்னூட்டல் செய்ய நடவடிகதை எடுக்கிறேன். | அனுமதியற்ற நிர்மாணங்களை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | பேரூந்து தரிப்பிட கடையறைகளை நிர்ாணிக்க 2014 மற்றும் 2015 ஆண்டுகளில் 29 டெண்டர்தாரர்கள் இடமிருந்து அறவிட்ட முற்செலுத்தற் பணம் ரூபா 24,299,000 தொகையை மீளாய்வாண்டு இறுதியிலும் குறித்த செயற்பாடுகளிற்கு பயன்படுத்தி இருக்காததுடன் அத் தொகை 2014 ஆண்டில் குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் வேறு செயற்பாடுகளிற்கு இடப்பட்டிருந்தது. | ஏற்றுக் கொள்வதாக. 2014 ஆண்டில் அறவிட்ட அத்தொகையை குறைநிரப்பு மதிப்பீடொன்றின் மூலம் வேலைக்காக செலவிடப்பட்டுள்ளதாக. | முற்செலுத்தல் தொகையை குறித்த செயற்பாடுகளிற்காக ஈடுபடுத்த வேண்டும். |

| 3.3 | மனிதவள முகாமைத்துவம் கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரைகள | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 59 ஆன அங்கீகார ஆளணியில் 27 வெற்றிடங்களும் 05 பேர்களின் மிகையும் காணப்பட்டது. அவ் வெற்றிடங்களிற்காக சேவை உடன்படிக்கை அடிப்படையில் மற்றும் அமைய அடிப்படையில் ஊழியர்கள் ஆட்சேர்கப்பட்டிருந்தனர். | ஏற்றுக் கொள்கிறேன். | தேவைக்கேட்ப வெற்றிடங்களை நிரப்பி மிகையை ஆக்கபூர்வமாக இணைக்க வேண்டும். |
| (ஆ) | அங்கீகார பதவிக்கு மேலதிகமாக மற்றும் உள்ளூராட்சி ஆணையாளரின் ஆலோசனைக்கு இணங்க, 2018 சனவரி 01 திகதி முதல் சேவை உடன்படிக்கையின் மீது முன்பள்ளி மேற்பார்வையாளர் ஒருவரை நியமித்து அத்திகதி முதல் 2022 திசெம்பர் வரை ரூபா 540,000 தொகை செலுத்தப்பட்டு இருந்தது. | ஏற்றுக் கொள்கிறேன். | சுற்றறிக்கை ஆலோசணைக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 01 ஆண்டு முதல் 29 ஆண்டுகள் வரையான காலம் கடந்துள்ள 09 அலுவலர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 416,699 ஆன கடன் மீதிகளை மீளாய்வாண்டு இறுதி வரையும் அறவிட்டிருக்கவில்லை. | ஏற்றுக் கொள்கிறேன். | நிலுவை கடன் மீதிகளை தாமதமின்றி அறவிட வேண்டும். |